செ.வெ.எண்.72 நாள் : 22.02.2020

# அரியலூர் மாவட்டத்தில் பாரம்பரிய உணவு கண்காட்சி அரங்கினை மாண்புமிகு அரசு தலைமைக்கொறடா திரு.தாமரை.எஸ்.இராஜேந்திரன் அவர்கள் திறந்து வைத்தார்கள்.

அரியலூர் மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகத்தில் ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சித் திட்டம் சார்பில் பாரம்பரிய உணவு கண்காட்சி அரங்கினை மாண்புமிகு அரசு தலைமைக்கொறடா **திரு.தாமரை.எஸ்.இராஜேந்திரன்** அவர்கள், மாவட்ட ஆட்சித்தலைவர் **திருமதி.த.ரத்னா, இ.ஆ.ப.,** அவர்கள் தலைமையில் திறந்து வைத்து, பார்வையிட்டார்கள்.

இந்நிகழ்ச்சியில், ஜெயங்கொண்டம் சட்டமன்ற உறுப்பினர் **திரு.ஜெ.கே.என்.இராமஜெயலிங்கம்** அவர்கள் கலந்துகொண்டார்.

**இந்நிகழ்ச்சியில், மாணவ, மாணவியர்கள் மற்றும் ஆராக்கியமான பெண் குழந்தைகளுக்கும் பரிசுகளை வழங்கி, மாண்புமிகு அரசு தலைமைக்கொறடா அவர்கள் தெரிவித்ததாவது,**

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் அரசு பெண்களின் நலன் கருதி பல எண்ணற்ற திட்டங்களை செயல்படுத்தி வருகிறார்கள். இதில் பெண் குழந்தைகளின் எண்ணிக்கையினை அதிகரிக்க, பெண் குழந்தைகளை காப்போம், பெண் குழந்தைகளை கற்பிப்போம் என்ற புதிய திட்டத்தினை அறிவித்து. இத்திட்டம் மத்திய அரசும், மாநில அரசும் இணைந்து சிறப்பாக செயல்படுத்தி வருகிறது. பெண்களுக்கும், பெண் குழந்தைகளுக்கும் நடைமுறைபடுத்தப்பட்டு வரும் சட்டங்களையும், நலத்திட்டங்களையும் குறித்த விழிப்புணர்வை பரவலாக்கி, பெண் குழந்தைகளின் எண்ணிக்கையை உயர்த்துவது இத்திட்டத்தின் நோக்கத்தின் மூலம் செயல்பட்டு வருகிறது.

மேலும், பெண் குழந்தைகளின் தன்னம்பிக்கையை அதிகப்படுத்தவும் அவர்களை ஊக்குவிக்கபடுகிற விதமாகவும் கல்வியின் தரத்தை மேம்படுத்தவும் பல்வேறு போட்டிகள் நடத்தி பரிசுகளும் வழங்கப்படுகிறது. மேலும் சுகாதாரத்துறை, செய்தி மக்கள் தொடர்புத்துறை, ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சித் திட்டம் மற்றும் சமூக நலத்துறை ஆகிய துறைகள் மூலம் பெண் குழந்தைகள் பாதுகாப்பு தொடர்பாக பல்வேறு விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டு வருகின்றன என மாண்புமிகு அரசு தலைமைக் கொறடா **திரு.தாமரை.எஸ்.இராஜேந்திரன்** அவர்கள் தெரிவித்தார்கள்.

பின்னர், பெண் குழந்தைகளை காப்போம், பெண் குழந்தைகளை கற்பிப்போம் என்ற விழிப்புணர்வு உறுதிமொழி ஏற்று, கையெழுத்து இயக்கத்தினை தொடங்கி வைத்தார்கள். மேலும், பெண் குழந்தைகளை காப்போம், பெண் குழந்தைகளை கற்பிப்போம் குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில் கலைநிகழ்ச்சிகள் நடைபெற்றது.

இந்நிகழ்ச்சியில், மாவட்ட ஊராட்சிக்குழு தலைவர் பொ.சந்திரசேகர், ஒன்றியக்குழுத்தலைவர் செந்தமிழ்செல்வி, ஒன்றிய வார்டு உறுப்பினர் சுந்தரவடிவேல், ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சித்திட்ட அலுவலர் நா.சாவித்ரி, துணை இயக்குநர் (சுகாதாரப்பணிகள்) வீ.சி.ஹேமசந்த் காந்தி, மாவட்ட சமூக நல அலுவலர் பா.அன்புகுளோரியா, மாவட்ட குழந்தை பாதுகாப்பு அலுவலர் து.வசந்தகுமார், குழந்தை வளர்ச்சி திட்ட அலுவலர்கள் அன்பரசி, யசோதாதேவி மற்றும் மாணவ, மாணவியர்கள், அங்கன்வாடி பணியாளர்கள் உட்பட பலர் கலந்துகொண்டனர்.

**செய்தி வெளியீடு :- செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், அரியலூர்.**